**திருவேற்காடு நகராட்சி.**

# <u>நகர்மன்ற சிறப்பு கூட்டம்</u>

திருவேற்காடு நகராட்சி நகர்மன்ற சிறப்பு கூட்டம் நகர்மன்றத் தலைவர் திரு E. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் வருகின்ற **20.05.2022** அன்று வெள்ளிக் கிழமை மாலை **4.00** மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நகராட்சி அலுவலகம்,** **நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு** **திருவேற்காடு நகராட்சி.**

## <u>அலுவலக பொருட்கள்</u>

## பொருள் எண்.1

அரசாணை (நிலை) எண் 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **30.03.2022** ன்படி சொத்துவரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்ய உத்திரவிடப்பட்டவாறு இந்நகராட்சி சொத்துவரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வது குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்யும் வகையில் தமிழ் நாளிதழிலும், ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்தமைக்கும் அரசிதழில் வெளியிடவும் தோராய செலவினமாக ரூ. **3.00** இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

ம ன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**தீர்மான எண்.58** **நாள்.20.05.2022**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.2

திருவேற்காடு நகராட்சியின் சொத்துவரி விதிப்புகள் மற்றும் காலிமனை வரிவிதிப்புகள் சீராய்வு செய்ய தேவையான சுயமதிப்பீட்டு படிவங்கள் மற்றும் Master List க்கான புத்தகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரி அச்சடித்து கொள்ளவும், தோராய செலவினம் ரூ. **3.00** இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.59** **நாள்.20.05.2022**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

---

## பொருள் எண் . 3

சொத்துவரி / காலிமனைவரி பொது சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30/03/2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1/ நாள்

11.04.2022 ஆகியவற்றின் அடிப்படையிலும், சொத்துவரி / காலிமனைவரி பொது சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டும் 2022 – 2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் திருவேற்காடு நகராட்சியில் சொத்துவரி/ காலிமனை வரி பொது சீராய்வு செய்திட கீழ்கண்ட விவரப்படி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது.

**சொத்துவரி**

**குடியிருப்பு கட்டங்கள் (Residential Building)**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| < = 600 | 1.25 ( 25%) |
| 601 - 1200 | 1.50 ( 50%) |
| 1201 -1800 | 1.75 ( 75%) |
| >1800 | 2 ( 100%) |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non / Residential Building)**

| வகைபாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 ( 75%) |
| வணிக பயன்பாட்டு கட்டங்கள் | 2 ( 100%) |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டங்கள் | 1.75 ( 75%) |
| | |

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி

வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

9) திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 1428 தெருக்கள்/சாலைகள்/சந்துகள் A. B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைபடுத்தப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு :

மேற்கண்ட விவரப்படிபொது சீராய்வுக்கு வைக்கப்பட்டு நகர மன்றத்திற்கு பொருள் நகர் மன்றத்தின் 11.04.2022 நாளிட்ட தீர்மானம் எண் 29 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு செய்வது தொடர்பாக சொத்தின் உரிமையாளர்களிடம் ஆட்சேபணைகள்/ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ, இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் 14.04.2022 ம் நாளிட்ட தினத்தந்தி மற்றும் தமிழ்முரசு தமிழ் நாளிதழ்களிலும் 14.04.2022 நாளிட்ட டெக்கான் கிரானிக்கல் ஆங்கில நாளிதழிலும் அலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. 30 தினங்களுக்குள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளுக்கு உரிய விளக்க கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் திருவேற்காடு நகராட்சி நகர் மன்ற தீர்மானம் எண் நாள் 29 நாள் 11.04.2022 ல் கண்டவாறு 2022 2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி/காலிமனைவரி பொது சீராய்வு செய்திட உறுதி செய்யும்பொருட்டு மன்றத்தின் இறுதி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) 2022 2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி/காலிமனை வரி பொது சீராய்வு செய்திட மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.
2) இந்நகராட்சி பகுதியில் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைபடுத்தப்பட்ட 1200 தெருக்களில் புதிதாக சேர்ந்த தெருக்களுக்கும் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.60** **நாள்.20.05.2022**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

---

*ஒம்/-*. **E. கிருஷ்ணமூர்த்தி**
**நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு**

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**திருவேற்காடு நகராட்சி.**